**OS.No.194/2022 P.W.1-ஞானதாசன் 04.08.2025**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் எஸ்.ஆர்.எம்.கல்லூரில் பேராசிரியராக பணிசெய்கிறேன். நான் தற்போது மேலாண்மை நிர்வாக துறையில் பேராசிரியாக உள்ளேன். இந்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் நான் சொல்லி போடப்பட்டது. ஜெபராஜை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர் சேலையூரில் ஒரு தேவாலயம் நடத்தி வந்தார், அப்பொழுது எனது உறவினர் மூலம் அவருடன் பழக்கம் ஏற்பட்டது. அந்த உறவினர் பெயர் என்னவென்றால் பன்னீர்செல்லன். நான் கொடுத்த ரூ.12,50,000/-யை திரும்ப கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஜெபராஜ் பணம் கேட்டு 2016ல் என்னை அனுகினார். மாதம், தேதி விவரம் ஞாபகமில்லை. ஜெபராஜ் என்னிடம் முதலில் ரூபாய் 5 லட்சம் கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், நான் நிலம் வாங்குவதற்கு பணம் வைத்துள்ளேன் என்றும் சொன்னேன். அதற்கு அவர், பணம் கொடுங்கள் நான் அதை திரும்ப கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். நான் வழக்கறிஞர் அறிவிப்பை எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 2022ம் ஆண்டில் அனுப்பினேன். வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பில், 2வது பத்தியில் ஜெபராஜ் என்பவர் வியாபார முதலீட்டிற்காக பணம் கேட்டு நான் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் எவ்வாறு பணம் கொடுத்தேன் என்றால் ரொக்கமாக பணம் கொடுத்தேன். நான் எந்த ரூபாய் எண்ணிக்கையில் பணம் கொடுத்தேன் என்றால் ரூபாய் 500 நோட்டுக்களாக கொடுத்தேன். பிரதிவாதி என்னிடம் வியாபாரம் செய்து பணத்தை திரும்ப செலுத்துவதாக நான் கூறும் நிலையில் அவருடன் நான் ஏதேனும் ஒப்பந்தம் போட்டேனா என்றால் இல்லை. அவர் என்ன தொழில் செய்து பணத்தை திரும்ப செலுத்துவதாக கூறினார் என்றால் அவர் ஒரு சிவில் லாயராக இருப்பதால் நிலத்தில் முதலீடு செய்து தருவதாக சொன்னார். நான் ரூ.12,50,000/-யை எவ்வளவு காலம் இடைவெளியில் பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்றால் 2 வருட கால இடைவெளியில் கொடுத்தேன். நான் ஒரு பேராசிரியாக பணிபுரிந்து வந்த நிலையில், பிரதிவாதி ஒரு வழக்கறிஞராக உள்ள நிலையில் எந்த ஆவணமும் எழுதிக் கொள்ளாமல் ரூ.12,50,000/-யை என்னால் எப்படி கொடுக்க முடிந்தது என்றால் அவர் மீதிருந்த நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். மேற்படி ரூ.12,50,000/-யை எத்தனை தவணைகளில் பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்றால் 4 தவணைகளில் கொடுத்தேன்.

4 தவணைகளின் தேதி ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. 2016 மற்றும் 2017ம் ஆண்டுகளில் எனது சம்பளம் எவ்வளவு என்றால் மாதம் ரூ.87,000/-. நான் வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஜெபராஜ் பணத்தை எங்கு வைத்து என்னிடம் வாங்கினார் என்றால் எனது வீட்டில் வைத்து வாங்கினார். நான் பணம் கொடுத்த பிறகு ஜெபராஜ் இருந்த தேவாலயத்திற்கும், அவரது வழக்கறிஞர் அலுவலகத்திற்கும் சென்று கேட்டேனா என்றால் நிறைய முறை சென்றுள்ளேன். ஜெபராஜின் இரண்டு தேவாலயங்கள் வைத்து நடத்தினார். பிரதிவாதி வீட்டின் முகவரி என்ன என்று கேட்டால் சேலையூர் காவல் நிலையத்திற்கு எதிரே உள்ள தெருவில் உள்ள இடதுபக்கத்தின் முதல் திருப்பத்தில் வீடு உள்ளது. மற்றொரு தேவலாயம் முடிச்சூர் ரோட்டில் உள்ள ஒரு வணிக வளாகத்தின் பின்புறத்தில் உள்ளது. எனக்கு, ஜெபராஜை கடந்த 10 ஆண்டுகளாக தெரியும். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை 07.12.2019 அன்று ஜெபராஜ் கொடுத்தார். அது கர்நாடகா வங்கியின் காசோலை ஆகும். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 தான் அந்த காசோலை ஆகும். முதல் காசோலை ரூபாய் 5 லட்சத்தை நான் சொல்லும்போது வசூலுக்கு போடுங்கள் என்று சொன்னார். நான் பலமுறை கேட்டும் அவர் வசூலுக்கு தாக்கல் செய்ய சொல்லவில்லை. எனவே நான் வசூலுக்கு போடவில்லை. ஒரு காசோலையின் காலவரையறை அப்பொழுது 6 மாதம் இருக்கும். நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஜெபராஜ் ஒரு சொத்தை அடமானம் வைத்து பணம் தருவதாக சொல்லியுள்ள நிலையில் அந்த சொத்தை குறித்து விவரம் தெரியுமா என்றால் இல்லை. நான் அவரிடம் பணத்தை பலமுறை கேட்டபோது அவ்வாறு சொன்னார். ஜெபராஜ் 2020ம் ஆண்டில் காலமானார். தேதி தெரியாது. ஜெபராஜின் இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் அது கொரோனா காலம் என்பதால் யாரும் போகவில்லை. என் குடும்பத்தாருக்கு ஜெபராஜை தெரியுமா என்றால் என் மனைவிக்கும், என் 2 மகன்களுக்கும் தெரியும். பணம் கேட்ட வகையிலும், தேவாலய கூட்டங்களுக்கு வரும்போதும் தெரியும். ஜெபராஜின் பின்னணி எனக்கு தெரியுமா என்றால் அவர் சிவில் வக்கீல் என்று சொன்னார். அவரை பற்றி நான் சிவில் வக்கீல் இருப்பதாக கேள்விபட்டுள்ளேன். 2014ல் தான் எனக்கு அவரை நேரடியாக தெரியும். ஜெபராஜ் இறந்த பிறகு 6 மாதங்கள் கழித்து அவரது குடும்ப உறுப்பினர்களிடம் போய் கேட்டேன். அவ்வாறு எந்த தேதியில் போய் அவரது குடும்ப உறுப்பினர்களிடம் பணம் கேட்டேன் என்றால் எனக்கு தேதி, மாதம் ஞாபகமில்லை. நான் ஒரு

சனிக்கிழமை விடுமுறை தினத்தில் போய் கேட்டேன். முதலில் அவரது குடும்ப உறுப்பினர்கள் இறப்பு குறித்து சோகத்தில் இருப்பதாகவும், பிறகு செட்டில் செய்வதாகவும் சொன்னார்கள். நான் அவர்களிடம் பணம் கொடுப்பது குறித்து ஏதாவது ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் எழுதி வாங்கவில்லை. மொத்தமாக கொடுத்து விடுவதாக சொன்னார்கள். எனக்கும், ஜெபராஜிக்கும் இடையில் இருந்த பணபரிவர்த்தனை குறித்து அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு தெரியுமா என்றால் நான் பணத்தை கேட்டு சென்றபோது தான் அவருடைய மனைவிக்கு தெரியவந்தது. ஜெபராஜ் ஒரு சிவில் வழக்கறிஞர் என்றும், அவர் சென்னை உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் தொழில் செய்தார் என்றும், அவ்வாறான நிலையில் அவர் என்னிடம் பணத்தை கேட்கவேண்டிய அவசியமில்லை என்றும், அவர் எந்த தொழிலும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஜெபராஜ் நிலம் வாங்கி, விற்கும் தொழில் செய்தார் என்பதற்காக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஜெபராஜ் நல்ல நிலையில் வசதியாக இருந்தார் என்றும், அவருக்கு என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றும், அவரது அலுவலகத்திற்கு அடிக்கடி சென்று வரும் வாய்ப்பை பெற்ற நான் அங்கிருந்து காசோலையை திருடி சென்று, பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஜெபராஜிடமும், அவரது குடும்ப உறுப்பினர்களிடமும் வழக்கு தொகை குறித்து எந்த ஆவணமும் எழுதி வாங்காத நிலையில் எனக்கு சட்டப்படி தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எவ்வளவு வட்டி கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் நீதிமன்றம் எவ்வளவு கொடுத்தாலும் சரியென்று வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். என் வழக்கிலும், என் பிரமாண வாக்குமூலத்திலும் 24 சதவீதம் வட்டி கோரியுள்ளேன் என்றும், அவ்வாறு கோரியுள்ளது சட்ட விரோதமானது என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை